**MCOP. No. 7642/2018** **DATE:25 .09.2025**

Deposition of Witness : P.W.1

Name : Mr.**தேவி**

Father/Husband Name : Mr.

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 25th day of september 2025.

---

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து எப்போது நடைபெற்றது என்றால் 26.04.2017 அன்று இரவு 8.30 மணிக்கு நடைபெற்றது. அந்த இடத்தில் ேபாக்குவரத்து நெரிசலாக இருந்தது என்றால் சரிதா'ன. நீங்கள் அந்த சாலையை குறுக்கே கடந்தீர்களா என்றால் இல்லை நான் ஓரமாக நின்று கொண்டிருந்தேன். இருசக்கர வாகனம் வருவதை கவனிக்காமல் திடீரென்று சாலையை அஜாக்கிராதையாக கடந்ததால் தான் இந்த விபத்து ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. நீங்கள் இந்த விபத்து பற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா என்றால் அன்றைய தினமே புகார் கொடுத்தேன். நீங்கள் வயது, தொழில், வருமானம் குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றல் சரிதான். இந்த விபத்தினால் உங்களுக்கு ஏற்ப்பட்ட காயங்கள் முற்றிலும் குணமாகி விட்டது என்றும் இந்த விபத்தினால் உங்களுக்கு எவ்வித நிரந்தர ஊணமோ வருமான இழப்போ ஏற்ப்படவில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றும் அது கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல, இந்த விபத்து உங்களுடைய கவனக்குறைவால் நடைபெற்றதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி: 25.09.2025.

3 ஆம் நீதிபதி
சிறுவழக்குகள் நீதிமன்றம்.